Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 31/2021**

**Deposition of PW.8 (LW.14)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முனியாண்டி | ஜாதி | : | |
| த/பெ | : | அழகர் | தொழில் | : | நடத்துனர் |
| கிராமம் | : | புதுகோடாங்கிபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 53/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2026.

(எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் புதுகோடாங்கிபட்டியில் குடியிருந்துகொண்டு நடத்துனராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் சாட்சியாக போடப்பட்டுள்ள கையெழுத்துக்களில் முதலாவது கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் சேர்ந்து சரத்குமார் என்பவர் கையொப்பம் செய்தார். மேற்படி கையெழுத்தை கடந்த 20.11.2020 ஆம் தேதி காலை சுமார் 06.00 மணியளவில் புதுகோடாங்கிபட்டி பிரிவில் வைத்து விபத்து சம்பவம் நடந்த இடத்தில் வைத்து செம்பட்டி காவல்நிலையத்தில் இருந்து வந்த போலிசார் அந்த இடத்தில் வரைபடம் வரைந்து விசாரித்து எங்களிடம் கையெழுத்து கேட்டார்கள். நாங்கள் கையெழுத்து செய்தோம். பார்வைமகசரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் **(அ.சா.ஆ.2/PW.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தன்று நீங்கள் பணி நிமித்தம் காரணமாக வேலைக்கு சென்றுவிட்டீர்கள் என்றால் சரியல்ல, காலையில் அங்கு தான் இருந்தேன். உங்களிடம் கையெழுத்து பெற்ற போலிசார் பெயர் தெரியாது என்றால் சரிதான். வாகன விபத்து ஏற்பட்ட

வாகனத்தின் எண்கள் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். நீங்கள் பார்வைமகசரில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor